# 2023 ஆம் ஆண்டு ஜீலை மாதம் 27–ஆம் நாள் வியாழக்கிழமை காலை 10.30 மணிக்கு வாணியம்பாடி நகராட்சியில் நடைப்பெற்ற நகரமன்ற அவசரக்கூட்டத்தின் மன்றப்பொருள்

1. நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடிதம் மே.கு.எண்.24470/2019/எம்ஏ2, நாள்.19.07.2023–ஆம் தேதிய கடிதத்தில் அரசாணை (நிலை) எண்.98, நாள்:13.07.2023 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (தேர்தல்) துறை மூலம் வெளியிடப்பட்டுள்ள அரசாணையில் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில் தேர்ந்தெடுக்கப்பட்ட மேயர்கள், துணை மேயர்கள், நகராட்சி மற்றும் பேரூராட்சிகளின் தலைவர்கள், துணை தலைவர்கள், மன்ற தலைவர்கள், மன்ற துணை தலைவர்கள் மற்றும் நகரமன்ற உறுப்பினர்களுக்கு 2023–ஆம் ஆண்டு ஜீலை மாதம் முதல் மாதந்தோறும் கீழ்குறிப்பிட்டுள்ளவாறு மதிப்பூதியம் வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ள அரசாணையில் தெரிவித்ததன் அடிப்படையில் இந்நகராட்சியில் தேர்தெடுக்கப்பட்டுள்ள நகரமன்ற தலைவர், நகரமன்ற துணை தலைவர் மற்றும் நகரமன்ற உறுப்பினர்களுக்கு கீழ்க்கண்ட விவரப்படி 2023–ஆம் ஆண்டு ஜீலை மாதம் முதல் மாதந்தோறும் மதிப்பூதியம் வழங்கவும், வரப்பெற்ற அரசாணை மன்றத்தின் பார்வைக்கும் மற்றும் மேற்படி அரசாணையின்படி நகரமன்ற தலைவர், துணை தலைவர் மற்றும் நகரமன்ற உறுப்பினர்களுக்கு தொகை வழங்க மன்றத்தின் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | நகரமன்ற உறுப்பினர்கள் | மதிப்பூதிய விவரம்<br>தொகை ரூ. |
|---|---|---|
| 1 | நகரமன்ற தலைவர் | 15000/– (ரூபாய் பதினைந்தாயிரம்) |
| 2 | நகரமன்ற துணை தலைவர் | 10000/– (ரூபாய் பத்தாயிரம்) |
| 3 | நகரமன்ற உறுப்பினர்கள்<br>(36 உறுப்பினர்கள்) | 5000/– (ரூபாய் ஐந்தாயிரம்)<br>ஒரு நகரமன்ற உறுப்பினர் |

<u>அலுவலக குறிப்பு</u> :

1. மன்றம் பதிவு செய்யலாம்.
2. மேற்படி அரசாணையில் தெரிவித்துள்ளபடி நகரமன்ற தலைவருக்கு ரூ.15000/–, நகரமன்ற துணைதலைவருக்கு ரூ.10000/– மற்றும் நகரமன்ற உறுப்பினர்களுக்கு தலா ரூ.5000/– நகராட்சி நிதியிலிருந்து மாதந்தோறும் மதிப்பூதியம் வழங்க மன்றம்அனுமதி வழங்கலாம்.

ந.க.எண்.1328/2023/சி1

தீர்மானம் எண். 140 பதிவு செய்யப்பட்டது.

2. இந்நகராட்சியில் 2022–2023–ஆம் ஆண்டின் நிர்வாக அறிக்கை (Administration Report) தயார் செய்து மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>: அனுமதிக்கலாம்.

ந.க.எண்.1197/2020/சி1

தீர்மானம் எண். 141 அனுமதிக்கபட்டது.

3. இந்நகராட்சிக்கு சொந்தமான பஸ் நிலையத்திற்கு வந்து செல்லும் பேருந்து நுழைவு கட்டணம் சுங்க வசூல் செய்யும் உரிமம் இனத்தின் குத்தகை 08.12.2022 அன்றுடன் முடிவடைந்துள்ளதை தொடர்ந்து குத்தகையினை முன்றாண்டுகளுக்கு பொது ஏலம்/ஒப்பந்தப்புள்ளி முலம் ஒப்படைக்க நடவடிக்கை எடுத்து பல முறை ஒப்பந்தப்புள்ளி/பொது ஏலம் கோரப்பட்டதில் ஒப்பந்தப்புள்ளி/ஏலம் யாரும் கோரவில்லை தற்பொழுது 20.06.2023ஆம் தேதியன்று ஒப்பந்தப்புள்ளி/ ஏலம் 14வது முறையாக கோரப்பட்டதில் வரப்பெற்ற கீழ்க்காணும் இரண்டு ஒப்பந்ததாரர்கள் வழங்கிய நபர்களில் வரிசை எண்.2–ல் காணும் திரு.ஆர்.பிரபாகரன் என்பவர் உயர்ந்தபட்ச குத்தகை உரிமம் தொகை ரு.3,71,000/–ம் என கொடுத்துள்ளதை ஏற்று குத்தகை ஒப்படைக்க மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | ஒப்பந்தப்புள்ளி கொடுத்தவரின் விவரம் | பேருந்து நுழைவு கட்டணம் சுங்க வசூல் உரிமம் குத்தகை ரு. |
|---|---|---|
| 1 | சி. சுந்தரேசன்,<br>கிருஷ்ணாபுரம்,நாயக்கனுரர். | ரு.3,70,000/– |
| 2 | ஆர். பிரபாகரன்,<br>த/ பெ ராமகிருஷ்ணன்,<br>937/5 புத்தநகர்,<br>காதர்பேட்டை, வாணியம்பாடி | ரு.3,71,000/– |

ந.க.எண்.2011/அ1/2022

அ.கு : மன்றம் அனுமதி வழங்கலாம்.

தீர்மானம் எண். 142 அனுமதிக்கபட்டது.

## <u>உள்ளூர் திட்டக்குழுமப் மன்றப்பொருள்</u>

1. திருப்பத்தூர் மாவட்டம், வாணியம்பாடி உள்ளூர் திட்டக் குழுமம், வாணியம்பாடி நகராட்சி, வார்டு ஜி, பிளாக்:17, நகரளவு எண்கள். 6/1B பாகம் ,6/1C, 11/3A1A, 11/3A1B, 11/3A2B, 11/6A, 11/6B, 11/12, 11/13, 11/26, 11/27, 11/28, 11/29, 11/31 மற்றும் 11/36 –இல் அமைந்துள்ள இடமானது வாணியம்பாடி உள்ளூர் திட்டக் குழும விரிவு மேம்பாட்டு திட்டம் எண்:7–இல் அமைகிறது. இந்த விரிவு மேம்பாட்டு திட்டத்தில் மேற்படி இடத்தின் வழியாக செல்லும்படியாக உத்தேசிக்கப்பட்டுள்ள சாலைகள் மற்றும் திறவிடங்கள் ஒதுக்கீடுகளை நீக்கம் செய்ய மனுதாரர் திரு. அக்பர் கவுசர் அவர்கள் உரிய வழிமுறையாக சமர்பித்த விண்ணப்பம் நகர் ஊரமைப்பு துறையால் பரிசீலிக்கப்பட்டு மேற்படி சாலைகள் மற்றும் திறவிட ஒதுக்கீடுகள் நீக்கம் செய்து உத்தரவு வழங்கப்பட்டுள்ளது. இதனை திருப்பத்தூர் மாவட்ட அரசிதழ் எண்:5, பக்கம்–13 இல் நாள்:14.11.2022–இல் பிரசுரம் செய்யப்பட்டுள்ளது. இதனை நகர் ஊரமைப்பு சட்டம் 1971 (act no:35 of 1972) பிரிவு 33(2)–இன் கீழ் உறுதி செய்ய வாணியம்பாடி நகராட்சி அலுவலகம் அறிவிப்பு பலகையில் பொதுமக்கள் பார்வையிடும் வகையில்

விளம்பரம்படுத்தவும், தமிழ் மற்றும் ஆங்கில தினசரி நாளிதழில் பிரசுரம் செய்தும், அதன் விவரத்தினை நகர் ஊரமைப்பு இயக்குநர், சென்னை அவர்களுக்கு சமர்ப்பிக்கும் வகையில் தீர்மானம் இயற்றி அனுப்பி வைக்க கோரி உதவி இயக்குநர் மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம் , திருப்பத்தூர் அவர்களிடமிருந்து வரப்பெற்றுள்ள கடிதம் ந. க. எண்.1041/2022, நாள்: 28.03.2023, வாணியம்பாடி உள்ளூர் திட்டக்குழுமத்தின் பார்வைக்கும், மேற்படி கடிதத்தில் தெரிவிக்கப்பட்டவாறு நகர் ஊரமைப்பு இயக்குநர், சென்னை அவர்களுக்கு அனுப்ப குழுமம் தீர்மானிக்க பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

பொருளில் குறிப்பிட்டுள்ள திருப்பத்தூர் மாவட்ட நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளவாறு மாவட்ட அரசிதழ் இந்நகராட்சி அறிவிப்பு பலகையில் பொதுமக்கள் பார்வைக்காக விளம்பரப்படுத்தப்பட்டதுடன் பொதுமக்களின் ஆலோசனை மற்றும் ஆட்சேபணைகளை 60 நாட்களில் தெரிவிக்க Afternoon ஆங்கில நாளிதழில் 29.04.2023–ஆம் தேதியன்றும், தினமணி தமிழ் நாளிதழில் 30.04.2023 தேதியில் பிரசுரம் செய்யப்பட்டது. 30.06.2023–இல் 60 நாட்கள் முடிவுற்ற நிலையில் ஆட்சேபனைகள் மற்றும் ஆலோசனைகள் ஏதும் இதுகாறும் வரப்பெறவில்லை. இதனையடுத்து நகர் ஊரமைப்பு சட்டம் 1971 (Act No.35 of 1972) பிரிவு 33(2)–யில் உறுதி செய்ய மேற்படி விவரத்தினை நகர் ஊரமைப்பு இயக்குநர் சென்னை அவர்களுக்கு அனுப்பி வைக்க உள்ளூர் திட்டக் குழுமம் அனுமதி அளித்து தீர்மானம் நிறைவேற்றலாம்.

**(ந. க. எண்.1789/2021/எப்1)**

**தீர்மானம் எண். 1 அலுவலகக் குறிப்பு அனுமதிக்கபட்டது.**